# கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனை கட்டடப் பணிகள் ஆய்வு



திருக்கோவிலூரில் கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த். உடன் க.பொன்முடி எம்எல்ஏ, முன்னாள் எம்.பி. பொன். கௌதமசிகாமணி உள்ளிட்டோர்.

**கள்ளக்குறிச்சி, அக்.4:** கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் திருக்கோவிலூர் எம்.எல்.ஏ. க. பொன்முடி சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதுதொடர்பாக க.பொன்முடி எம்எல்ஏ செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருக்கோவிலூர் மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகதரம் உயர்த்த ஆணையிட்டதன் அடிப்படையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டடத்தின் பெரும்பான்மையான பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகளை விரைவில் முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இக் கட்டடப் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

கட்டுமானப் பணிகளை செப்டம்பர் மாதத்தில் முடித்து நவம்பர் மாதத்தில் மருத்துவமனையை தமிழக முதல்வரால் திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார் அவர்.

ஆய்வின்போது திருக்கோவிலூர் துணை ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், கள்ளக்குறிச்சி முன்னாள் எம்.பி. பொன்.கௌதம சிகாமணி, திருக்கோவிலூர் நகர்மன்றத் தலைவர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.தங்கம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# அன்னியூருக்கு புதிய தார்ச்சாலை அமைக்க ஆய்வு

**விழுப்புரம், அக்.4:** விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட மேல்காரணை ஊராட்சியிலிருந்து விஜயன்குப்பம் வழியாக அன்னியூர் ஊராட்சிக்குச் செல்ல புதிய தார்ச்சாலை அமைக்க இடம் தேர்வு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேல்காரணையிலிருந்து அன்னியூர் ஊராட்சிக்குச் செல்ல புதிய சாலை வசதி இல்லாததால், தார்ச்சாலை அமைத்துத் தருமாறு விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. அன்னியூர் அ.சிவாவிடம் அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து மேல்காரணை ஊராட்சியிலிருந்து விஜயன்குப்பம் வழியாக அன்னியூர் ஊராட்சிக்கு செல்வதற்காக தார்ச்சாலை அமைக்க இடம் தேர்வுப் பணி அண்மையில் நடைபெற்றது. இதையொட்டி சுமார் 4 கி.மீ. தொலைவுக்கு பொதுமக்களுடன் விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. அன்னியூர் அ.சிவா நடந்து சென்று, இடம் தேர்வு செய்வதற்கான ஆய்வை மேற்கொண்டார்.

நிகழ்வில் ஒன்றியச் செயலர்கள் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் உறுப்பினர் சுரிதா, மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் தர்மலிங்கம், சிவராமன், சுந்தர், புஷ்பராஜ், மணிபாலன், கிளைச் செயலர் தண்டபாணி, அன்பரசு, திருமால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# போதை மாத்திரைகள் விற்பனை: 3 இளைஞர்கள் கைது



போதை மாத்திரைகள் விற்பனை வழக்கில் கைதானவர்கள்.

**விழுப்புரம், அக்.4:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதிகளில் போதை மாத்திரைகள், மருத்துகள் விற்பனை செய்ததாக 3 இளைஞர்களை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

விழுப்புரம் எஸ்.பி. உத்தரவின் பேரில், திண்டிவனம் போலீஸார் திண்டிவனம் - மயிலம் கூட்டுச் சாலையில் சனிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த இளைஞர்களைப் பிடித்து சோதனை செய்தபோது, அவர்கள் போதை மாத்திரைகள் மற்றும் ஊசிகள் வைத்திருந்தது தெரியவந்தது.

தொடர்ந்து, போலீஸார் மூவரையும் பிடித்து விசாரித்ததில், திண்டிவனம் வட்டம், ஆலப்பாக்கம், மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த இளந்திரையன் (25), திண்டிவனம் இந்திராநகர் ராகுல் (24), நாகலாபுரம், சின்ன முதலியார் தெருவைச் சேர்ந்த சூர்யா (23) என்பதும், இவர்கள் திண்டிவனம் பகுதிகளில் போதை மாத்திரைகள், ஊசிகளை விற்க முயன்றதும் தெரியவந்தது.

இதையடுத்து, திண்டிவனம் போலீஸார் வழக்குப் பதிந்து மூவரையும் சனிக்கிழமை கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்த 100 போதை மாத்திரைகள், 4 ஊசிகள், 3 கைப்பேசிகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

# மாணவர்களுக்கு கல்வியும், சமுதாயப் பணியும் இரு கண்கள்

## சென்னை பல்கலை. உதவிப் பதிவாளர்



பள்ளி மாணவர்களின் நாட்டுநலப் பணித் திட்ட முகாமில் பங்கேற்ற சென்னை பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் தமிழ்வாணன்.

**விழுப்புரம், அக். 4:** மாணவர்களுக்கு கல்வியும் , சமுதாயப் பணியும் இரு கண்கள் போன்றவை என்று சென்னை பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் தமிழ்வாணன் தெரிவித்தார்.

திண்டிவனம் வட்டம், பாதிராப்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் நாட்டு நலப் பணி திட்ட நிறைவு விழா கொல்லியங்குணத்தில் அண்மையில் நடைபெற்றது.

பள்ளித் தலைமையாசிரியர் குமரவேல் தலைமை வகித்தார். சிருஷ்டி பவுண்டேஷன் மேலாளர் கணேசன், மகளிர் நல அறக்கட்டளை நிர்வாகி அமுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சென்னை பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் தமிழ்வாணன் பேசியது: மாணவர்கள் படிக்கும் காலத்திலேயே போட்டித் தேர்வுகளுக்கு தயாராக வேண்டும். கல்வியுடன் சேர்த்து சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டால் உலகில் ஒரு தனித்த இடத்தை பெற முடியும். கல்வியும் சமுதாயப் பணியும் இரு கண்களைப் போன்றவை. இவை மாணவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தும் என்றார்.

விழாவில், சென்னை அரசுப் பள்ளி ஆசிரியர் ஸ்ரீதர், கிராம நிர்வாக அலுவலர் கலைச்செல்வன், உயிர் பதிப்பக நிறுவனர் சண்முகநாதன் மற்றும் தமிழ்வேந்தன் ஆகியோர் பேசினர். ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.பள்ளியின் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் பஞ்சாட்சரம் வரவேற்றார். மாணவி யுவராணி நன்றி கூறினார்.

# பைக்கில் மதுப்புட்டிகள் கடத்தல்: இளைஞர்கள் இருவர் கைது



மதுப்புட்டிகள் கடத்திய வழக்கில் கைதான சூ.எத்திராஜ், அ. தன்சிங் .

**விழுப்புரம், அக்.4:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் பைக்கில் மதுப்புட்டிகளை கடத்தி வந்த இளைஞர்கள் இருவரைப் போலீஸார் சனிக்கிழமை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

விழுப்புரம் எஸ். பி ப. சரவணன் உத்தரவின் பேரில், திண்டிவனம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் முருகானந்தம்,அய்யப்பன் தலைமையிலான போலீஸார் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் பகுதியில் சனிக்கிழமை வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது,அங்கு பைக்கில் வந்த இருவரை மடக்கி சோதனை செய்தபோது, பைக்கில் வெளி மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட மதுப்புட்டிகள் இருந்தது தெரியவந்தது.தொடர்ந்து, இருவரையும் பிடித்து காவல் நிலையம் கொண்டு சென்று நடத்திய விசாரணையில், அவர்கள் புதுச்சேரி மாநிலம், அரும்பார்த்புரம், தண்டுக்கரை தெருவைச் சேர்ந்த எத்திராஜ் (29), விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளாமூர், விவேகானந்தர் தெருவைச் சேர்ந்த தன்சிங் (25) ஆகியோர் என்பதும், இவர்கள் விற்பனைக்காக புதுச்சேரி பகுதியில் மதுப்புட்டிகளை வாங்கி பைக்கில் கடத்தி வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து திண்டிவனம் போலீஸார் வழக்குப் பதிந்து இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறையிலடைத்தனர். மேலும் அவர்கள் வசமிருந்த 58 வெளி மாநில மதுப்புட்டிகள், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட பைக் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர்.

# டாஸ்மாக் கடை மேற்பார்வையாளருக்கு கொலை மிரட்டல்: இளைஞர் கைது

**விழுப்புரம், அக்.4:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே டாஸ்மாக் மதுக் கடை மேற்பார்வையாளரை மதுப் புட்டியால் குத்திக் கொலை மிரட்டல் விடுத்ததாக இளைஞரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

திண்டிவனம் வட்டம்,சிங்கனூர், மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் வேல்முருகன் (52). திண்டிவனம் வட்டம், தீவனூரில் உள்ள டாஸ்மாக் மதுக் கடையில் மேற்பார்வையாளராக உள்ளார். இவர், சனிக்கிழமை கடையில் வழக்கமான பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, அங்கு வந்த தீவனூர் ராஜீவ் காந்தி நகரைச் சேர்ந்த ராஜ்குமார் (29) மதுப் புட்டி கடனாக கேட்டாராம். இதற்கு, வேல்முருகன் தர மறுத்ததால், ஆத்திரமடைந்த ராஜ்குமார், தகாத வார்த்தைகளால் அவரைத் திட்டி, மதுப் புட்டியால் குத்தி கொலை மிரட்டல் விடுத்தாராம். இதுகுறித்த புகாரின்பேரில், ரோஷணை போலீஸார் வழக்குப் பதிந்து ராஜ்குமாரை கைது செய்தனர்.

# மனநலம் பாதித்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை

**விழுப்புரம், அக்.4:** கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே மனநலம் பாதித்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக உறவினரை போலீஸார் தேடி வருகின்றனர்.

புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவர் பாண்டியன். இவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகிலுள்ள கிராமத்தில் உறவினர் வீட்டுக்கு வந்து செல்வாராம். அதன்படி, வெள்ளிக்கிழமை மாலை உறவினர் வீட்டுக்கு வந்த பாண்டியன், அவரின் 19 வயதுடைய சற்று மனநலம் பாதிக்கப்பட்ட இளம்பெண்ணை கடைக்கு வருமாறு கூறி அழைத்துச் சென்றாராம்.

சிறிது நேரம் கழித்து இளம்பெண்ணை வீட்டுக்கு காரில் அழைத்து வந்து விட்டு விட்டு, பாண்டியன் அங்கிருந்து சென்றுவிட்டார். இதைத் தொடர்ந்து மகளிடம் அவரது தாய் விசாரித்த போது, தனக்கு நிகழ்ந்த பாலியல் தொல்லை குறித்து அவர் கூறினாராம். இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட இளம்பெண்ணின் தாய், திருநாவலூர் காவல் நிலையத்தில் புகாரளித்தார். இந்த புகாரின் பேரில் வழக்குப்பதியப்பட்டது., தொடர்ந்து பாலியல் தொல்லை அளித்தபாண்டியனைக் கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டு, அவரைத் தேடும் பணியில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

# உளுந்தூர்பேட்டையில் புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க கருத்துக்கேட்பு

**விழுப்புரம், அக்.4:** கள்ளக்குறிச்சி மாவட்டம்,உளுந்தூர்பேட்டையில் புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக, நகராட்சி அலுவலகத்தில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் முக்கியப் பகுதிகளில் ஒன்றான உளுந்தூர்பேட்டை நகரத்தில் நிலவிவரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், முதல்வரிடம் கோரிக்கையாக அளித்திருந்தார். இதைத் தொடர்ந்து புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக பொதுமக்கள் உள்ளிட்டோரிடம் கருத்துகளைக் கேட்டறிவதற்கான கூட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்துக்கு நகர்மன்றத் தலைவர் திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

துணைத் தலைவர் வைத்தியநாதன், ஆணையர் புஸ்ரா, மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் வியாபாரிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் முகமது கனி, மாவட்ட நிர்வாகிகள் அமிர்தகண்டேசன், தமிழ்மணி, ரோட்டரி சங்கத்தின் மாவட்டத் தலைவர்கள் அன்பழகன், வின்சென்ட், ரவி, அறங்காவலர் குழுத் தலைவர் செல்லையா, நகர்மன்ற உறுப்பினர்கள் கலா சுந்தரமூர்த்தி, மாலதி ராமலிங்கம், செல்வகுமாரி ரமேஷ்பாபு, முருகவேல், ராஜவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்று, தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தனர்.

புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்தல், நிலத்தை கையகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு தாங்கள் ஒத்துழைப்பை வழங்குவதாககூட்டத்தில்பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

# கார் மோதி முதியவர் உயிரிழப்பு

**விழுப்புரம், அக்.4 :** விழுப்புரம் மாவட்டம், வானூர் அருகே கார் மோதி முதியவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தென்கோடிபாக்கம், பிரதான சாலையைச் சேர்ந்தவர் அங்கப்பன் (71).

இவர், வெள்ளிக்கிழமை தென்கோடி பாக்கம் அடுத்த அருவாப்பாக்கம் பகுதியில் உள்ள மனைப்பிரிவு அருகே புதுச்சேரி-திண்டிவனம்தேசியநெடுஞ்சாலையோரத்தில் நின்றபடி ஆடு மேய்த்துக் கொண்டிருந்தாராம்.

அப்போது புதுச்சேரியிலிருந்து-திண்டிவனம் நோக்கிச் சென்ற கார் அங்கப்பன் மீது மோதியதில் அவர், பலத்த காயமடைந்து நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து கிளியனூர் போலீஸார் விரைந்து சென்று சடலத்தை கைப்பற்றி, புதுச்சேரி பிம்ஸ் மருத்துவமனைக்கு உடற்கூராய்வுக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விழுப்புரத்தில் காய்கறி விலை நிலவரம்

கிலோ அடிப்படையில்

| | |
|---|---|
| தக்காளி | ரூ.20-24 |
| உருளைக்கிழங்கு | ரூ.40 |
| சின்ன வெங்காயம் | ரூ.40 |
| பெல்லாரி வெங்காயம் | ரூ.25-30 |
| கத்திரிக்காய் | ரூ.50 |
| வெண்டைக்காய் | ரூ.25 |
| முருங்கைக்காய் | ரூ.100 |
| பீர்க்கங்காய் | ரூ.40 |
| சுரைக்காய் | ரூ.20 |
| புடலங்காய் | ரூ.30 |
| முள்ளங்கி | ரூ.30 |
| பீன்ஸ் | ரூ.60 - 70 |
| அவரைக்காய் | ரூ.80 -120 |
| கேரட் | ரூ.50 |
| மாங்காய் | ரூ.40-60 |
| பாகற்காய் | ரூ.40-50 |
| வாழைக்காய் | ரூ.30 |
| கொத்தவரங்காய் | ரூ.40 -50 |
| பூசணிக்காய் | ரூ.30 |
| பரங்கிக்காய் | ரூ.30 |
| கருணைக்கிழங்கு | ரூ.50 |
| பிடிகருணை | ரூ.70 |
| எலுமிச்சை | ரூ.100 |
| நெல்லிக்காய் | ரூ.90 |
| முட்டைகோஸ் | ரூ.30 |
| காலிஃப்ளவர் | ரூ.25-30 |
| பீட்ரூட் | ரூ.35 |
| நூல்கோல் | ரூ.50 |
| சௌசௌ | ரூ.35 |
| பச்சைமிளகாய் | ரூ.70 |
| குடைமிளகாய் | ரூ.80 |
| இஞ்சி | ரூ.70 -100 |
| கொத்தமல்லி | ரூ.50 |
| புதினா | ரூ30 |
| சுண்டைக்காய் | ரூ.80 |
| கோவைக்காய் | ரூ.40 |
| வாழைத்தண்டு ஒன்று | ரூ.10 |
| வாழைப்பூ ஒன்று | ரூ.20 |
| கீரைகள் | ரூ.15-20 |

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|---|---|---|
| கிளை அலுவலகம்: எண்.25,25A & 26, தரைத்தளம், சொரப்நாயக்கர் சாவடி ரோடு, திருப்பாபுலியூர், கடலூர், தமிழ்நாடு-607002 | | | | | |
| 1. | 1610210170000020 / 1.Mr.K.சுந்தரவரதன் 2.Mrs.மங்கையர்கரசி | (i) 13.05.2021 & 11.05.2021 அன்றுள்ளபடி ₹ 6,47,500/- (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 07.03.2022 & நேரடி சுவாதீனம் - 29.05.2025 | 12.09.2025 அன்றுள்ளபடி ₹14,64,636.80 (ரூபாய் பதினான்கு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்து ஆறு மற்றும் பைசா எண்பது மட்டும்) | ₹ 4,14,000/- (ரூபாய் நான்கு லட்சத்து பதினான்காயிரம் மட்டும்) | ₹ 41,400/- (ரூபாய் நாற்பத்து ஒன்றாயிரத்து நானூறு மட்டும்) |
| சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், நெல்லிக்குப்பம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட நத்தம் மறு சர்வே எண்.49/1-5.28.5, பழைய சர்வே எண்.49/1-Act 13.06, சொர்ணவூர்மேல்பாதி கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, கண்டமங்கலம் பஞ்சாயத்து யூனியன் எல்லை, கடலூர் மாவட்டம் என்னும் முகவரியில் 748 சதுர அடி நிலம் மற்றும் அதில் செங்கற்கல்லால் கட்டப்பட்டுள்ள RCC கூரையிட்ட குடியிருப்பு கட்டிடம். அதனுடன் மின்சார இணைப்பு, பொருத்தப்பட்டுள்ளவை மற்றும் டெபாசிட். அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக இருதிசையிலும் 22 அடி, தெற்கு வடக்காக இருதிசையிலும் 34 அடி, ஆகமொத்தம் 748 சதுர அடி நிலம். எல்லைகள்: தெருவுக்கு தெற்கு, கலியவரதன் வீட்டுக்கு கிழக்கு, கலியவரதன் வீட்டுக்கு வடக்கு, பாலகிருஷ்ண கவுண்டர் வீட்டுக்கு மேற்கு. | | | | | |
| கிளை அலுவலகம்: எண்.25, J J காம்ப்ளெக்ஸ், பண்ருட்டி மெயின் ரோடு, வடலூர், கடலூர், தமிழ்நாடு - 607303 | | | | | |
| 2. | 1638210170000016 / 1. Mr. தேவராஜ் S. 2.Mrs.பூங்குடி D | (i) 29.11.2021 & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ 7,81,271/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தோராயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 18.04.2022 & நேரடி சுவாதீனம் - 07.06.2025 | 02.09.2025 அன்றுள்ளபடி ₹16,27,105.58 (ரூபாய் பதினாறு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து நூற்று ஐந்து மற்றும் பைசா ஐம்பத்து எட்டு மட்டும்) | ₹ 10,30,000/- (ரூபாய் பத்து லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) | ₹ 1,03,000/- (ரூபாய் ஒரு லட்சத்து மூன்றாயிரம் மட்டும்) |
| சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சார் பதிவு எல்லைக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து யூனியன் எல்லை, கண்ணா மதுரா, பெரியகண்ணாடி கிராமம், தோப்பு தெரு, கடலூர் மாவட்டம் என்னும் முகவரியில் நத்தம் புதிய சர்வே எண். 102-1-8.01.0 ஏர்ஸ், தற்போது ஒழுங்குமுறை திட்ட மறு சர்வே எண்.178-14-00200 சதுர மீட்டர், பழைய சர்வே எண்கள்.53/ மற்றும் 63/1, பட்டா எண்.144, பரப்பு 0.05 செண்ட் (அதாவது) 2180 சதுர அடி நிலம் மற்றும் இதில் செங்கற்கலால் கட்டப்பட்டுள்ள RCC கூரையிட்ட குடியிருப்பு கட்டிடம். (26 X 22 ½ = 585 சதுர அடி), அதனுடன் மின்சார இணைப்பு எண்.732, பொருத்தப்பட்டுள்ளவைகள், டெபாசிட்டுகள், அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: தோப்பு தெருவுக்கு கிழக்கு, S.தேவராஜ் மனைக்கு மேற்கு, ராதாகிருஷ்ணன் வீட்டு மனைக்கு வடக்கு, சிவநாதம் வீட்டு மனைக்கு தெற்கு. | | | | | |

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 14.11.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 13.11.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 12.11.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ ஜோஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD, மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம். i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 05.10.2025

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

லீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண். 31, பழைய எண்.14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

சுவாதீன அறிவிப்பு

விதி 8(1)-ன் கீழ் (அசையா சொத்துக்களுக்காக)

SARFAESI சட்டம் 2002ன் u/s 13(4) சொத்துக்களை வைத்திருப்பது தொடர்பான அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002)-ன் கீழ் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(12), உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 9-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி கீழ் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு மற்றும் அவர்களுக்கு இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்ப செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், அதனுடன் வாசிக்கப்பட வேண்டிய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளின் கீழ் விதி 9-க்கு இணங்கவும் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ளக் கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும்.

சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)ன் ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள கடன்தாரர்/அடமானதாரர்கள் /ஜாமீன்தாரர்களுக்கு உள்ள கால அவகாசத்தை கவனத்தில் கொள்ளவும்.

| கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி மற்றும் கணக்கு எண். | அறிவிப்பு தேதி | சுவாதீன தேதி | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| Ref. No. HL/7730 கணக்கு எண். LPR020902589231 1. திரு. A. சஞ்சீவி (விண்ணப்பதாரர்), த/பெ.ஹரிராமன், 2. திருமதி.D. மல்லிகா (இணை விண்ணப்பதாரர்), த/பெ.தனபால், இருவரின் முகவரி : எண்.32, வடக்கு தெரு, சோர்பட்டு, பாண்டிச்சேரி - 605 501. | 29.07.2025 | 30.09.2025 | 15.07.2025 அன்று வரை ரூ. 13,60,396/- மேலும் இத்தொகை 15.07.2025 வரை வட்டிடன் |

சொத்துக்களின் விவரங்கள் : வகை எண்.1 : பாண்டிச்சேரி பதிவு மாவட்டம், திருக்கனூர் துணைப்பதிவு மாவட்டம், மண்ணாடிபேட்டை கொம்யூன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சோர்பட்டு கிராமம், கானி அளவீடு எண்.715, மறு சர்வே எண்.17/1, பட்டா எண். 344-ன் படி 3 குழி 02 வீசம் அதற்கு சமமாக 02.00 ஏர்ஸ் இதன் வடக்கு பகுதியில் 0.83 சென்டிஏர் அதற்கு சமமாக 1 குழி 09வீசம் மொத்தப்பரப்பளவு 900 சதுர அடி.

வகை எண்.2 : பாண்டிச்சேரி பதிவு மாவட்டம், திருக்கனூர் துணைப்பதிவு மாவட்டம், மண்ணாடிபேட்டை கொம்யூன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சோர்பட்டு கிராமம், கானி அளவீடு எண்.629, மறு சர்வே எண்.17/17A, பட்டா எண். 272-ன் படி 9ஏர் அதற்கு சமமாக 17 குழி 01 வீசம் இதன் மேற்கு பகுதியில் 2ஏர் 37 சென்டிஏர் அதற்கு சமமாக 04 குழி 07 வீசம் அல்லது 2556 சதுர அடி.

வகை எண். 1 மற்றும் வகை எண். 2 சேர்த்து மொத்தப்பரப்பளவு 3 ஏர் 20 சென்ட்ஏர் அதற்கு சமமாக 06 குழி மொத்தப்பரப்பளவு 3456 சதுர அடி மற்றும் அங்குள்ள கட்டிடம் மற்றும் அனைத்து வழக்கமான உரிமைகள். எல்லைகள்: மேற்கில்: சாலை, வடக்கில்:ரங்கநாதன் மனை, கிழக்கில்: இனியபிரான் மனை, தெற்கில்: பாக்கியலஷ்மி மனை.

தேதி : 30.09.2025
இடம் : சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்